விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 27 ஐ ஆவ்வல் 14 இதழ் 27

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11—3—82

## மலேசியா சென்ற இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்!

கோலாலம்பூர், மார்ச் 10 மலேசியாவில் வேலைபெறச் சென்ற 95இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்!

மலேசியாநாட்டிற்குள் செல்வதற்கு தேவையான பத்திரங்கள் இல்லாததனுல் இவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இவர்கள் மூன்று நாட்கள் சிங்கப்பூர் வீதிகளில் காணப்பட்டனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வேலைபெறச் சென்ற ஒவ்வொருவரும் ஏஜன்சிகளுக்கு 1000 அமெரிக்க டாலர்கள் வழங்கியதாகவும் கூறப்பட்டது. (க)

# அடுத்த பொதுத்தேர்தலிலும் ஐ.தே. கட்சியே வெற்றிபெறும்!

## சபையில் பிரதமர்

(கொழும்பு)

''அடுத்த பொதுத்தேர்தலிலும் நாமே அமோக வெற்றியுடன், மீண்டும் ஆட்சியை அமைப்போம். ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிப்பதைத் தவிர மக்களுக்கு வேறுவழியில்லை''

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

''மக்களே எமது பொருளாதாரக் கொள்கைகளை ஏற்றுள்ளார்கள்' வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு எம்மால் ஏற்படுத்தப்பட்டதல்ல. 1977 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் பதவிக்கு வந்திருந்தால் நாட்டின் நிலை என்னவாக இருந்திருக்கும்?7 ஆண்டுகள் அக்கட்சி புரிந்த அதிகார துஷ்பிரயோகத்தினுல்தான் 77ம் ஆண்டுத் தேர்தலில் மக்கள் எம்மைத் தெரிவுசெய்தார்கள். எமது பொருளாதாரக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டுள்ள மக்கள் வரும் தேர்தலிலும் எம்மையே தெரிவு செய்வார்கள் 1980 யூலை மாதம் வேலை இழந்த தொழிலாளர் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம். அமைச்சரவை எடுத்த முடிவுகளின்படி பலர் மீண்டும் வேலைகளுக்கு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மீதமானவர்கள் பற்றியும் உரிய நடவடிக்கைகளைநாம் மேற்கொள்வோம்.'' (இ—ம)

## பிளவுபட்ட சுதந்திரகட்சி விரைவில் இணையும்

### அநுரா நம்பிக்கை

(கொழும்பு)

பிளவுபட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சின் இரு பிரிவுகளும் புத்தாண்டுக்கு முன்னதாக இணையும் என்று திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்றுக் கூறினுர்.

இந்தியாவிலிருந்து நேற்று நாடு திரும்பிய தமது அன்னையாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆரத்தழுவி வரவேற்ற பின்னர் திரு. அநுரா பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு கோஷ்டிகளையும் மீண்டும் இணைப்பதற்கான முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் அநேகமாக புத்தாண்டுக்கு முன்னரே சேரக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை மைத்திரி பிரிவு சுதந்திரக்கட்சியின்செயலாளர் திரு. நிஹால் ராஜபக்ஷ, அரசியல் கட்சிகளிடையே பிரிவு ஏற்படுவதும் அவை மீண்டும் ஒன்றிணைவதும் ஒன்றும் புதி

(8ம் பக்கம் பார்க்க)

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள்

[கொழும்பு]

பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் பொலிஸ்மா அதிபராகப் பதவி ஏற்பதைத் தொடர்ந்து, மேலும் மூன்று பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக பதவிஉயர்வு பெறுகிருர்கள்.

திரு. ஆர். சுந்தரலிங்கம், திரு. ஹேபர்ட் வீரசிங்க, திரு. ஜோசப் ஆகிய மூவருமே பதவி உயர்வுபெறும் பிரதிப்பொலிஸ் மாஅதிபர்களாவர்.

பொலிஸ்மா அதிபர் திரு. அனு செனவிரத்ன இம்மாதம் 15ந் திகதியுடன் ஓய்வுபெறுகிருர். இவர்ஓய்வுபெறுவதைத் தொடர்ந்து திரு. ருத்ரா ராஜசிங்கம் பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்பார்.

திரு. அனுசெனவிரத்தினவுக்கு பிரியாவிடை அளிக்கும் வைபவமாக 15 ந் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் பொலிஸாரின் அணிவகுப்பு ஒன்றும் நடைபெறும். (ம)

## ஆயுத முனையில் ரூ. 52,000 வழிப்பறி!

(யாழ்ப்பாணம்)

ஆயுத முனையில் ஒரு லொறியை மறித்த கோஷ்டியினர், 52,000 ரூபாவை கொள்ளை அடித்துச்சென்றுள்ளனர்.

வவனியா பொலிஸ் பகுதியில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மன்னுர் சென்றுகொண்டிருந்த ஒரு லொறியை நேற்று முன்தினம் நள்ளிரவு ஆயுத முனையில் கொள்ளைக்கோஷ்டி ஒன்று வழிமறித்து, லொறிச்சாரதியிடமிருந்த ஐம்பத்து இரண்டாயிரம் ரூபாவையும் சாரதியின் கைக்கடிகாரத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாம். இக் கொள்ளை சம்பந்தமாக திருமூர்த்தி, பெர்ணுண்டோ ஆகிய இருவரும் வவனியா பொலிசில் புகார் தெரிவித்துள்ளனர்.

வவனியா பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## அச்சுவேலி நவரத்தினம் மரணம் சாட்சியங்கள் சோடிக்கப்பட்டுள்ளது: இராணுவ சார்பு சட்டத்தரணி கூற்று!

(நமது நிருபர் ஜி.இராமநாதன்)

அச்சுவேலியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான கந்தையா நவரத்தினம் என்பவரது மரணம் குறித்த மரணவிசாரணை அரசாங்க இரசாயன பகுப்பாய்வளரின் அறிக்கை கிடைக்காததால் இம்மாதம் 29-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மரண விசாரணையின் நடுவில் சாட்சியங்கள் யாவும் சோடிக்கப்பட்டுள்ளதாக தாம் சந்தேகிப்பதாக இராணுவ சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்பிரணி குறிப்பிட்டார்.

### இருவர் சாட்சியம்

மல்லாகம் நீதிபதியால் ஏற்கனவே நடத்தப்பட்டு ஒத்திவைக்கப்பட்டிருந்த மேற்படி மரண விசாரணை நேற்று நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் திரும்பவும் எடுக்கப்பட்டது.

இவரது சாட்சியங்கள் நேற்று இடம்பெற்றன. சாட்சியங்களின் நடுவே இராணுவ சந்தேகநபர்கள் சார்பில் கொழும்பிலிருந்து வந்து ஆஜரான ஏ. சி. டி. சொய்ஸா மரணவிசாரணைச் சாட்சியங்கள் சோடிக்கப்பட்டுள்ளன என்று தாம் சந்தேகிப்பதாகக் கூறினுர்.

சாட்சிகளது வாக்குமூலங்கள் வெவ்வேறு திகதிகளில் பொலிஸாரால் பதியப்பட்டுள்ளதால் இவற்றில் தாம் சந்தேகம்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### சட்டத்தரணி ஆட்சேபம்

இறந்தவர் சார்பில் சாட்சிகளது நலன்களைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி பா. கிருஷ்ணகுமார் இதனை ஆட்சேபித்தார். ''சம்பவத்தையடுத்து உடனடியாகவே சாட்சிகளைத் தாம் பொலிஸார் முன்னர் ஆஜர்செய்ததாகவும், பொலிஸார் உடனடி விசாரணைகளை மேற்கொண்டிருந்தாலும், இரசாயனப் பகுப்பாய்வாளரை வரவழைத்துப் பரிசீலனை மேற்கொள்வதில் அவர்கள் ஈடுபட்டிருந்ததாலும் பொலிஸாரால் அவர்களது வாக்குமூலங்களை உடன் பெறுவதற்கு முடியவில்லை.

(8ம் பக்கம் பார்க்க)

## ''நவரத்தினம் இறந்தபோது ரூ.4,000 அவரிடமிருந்தது''

### மரணவிசாரணையில் சாட்சியம்

(மாவிட்டபுரம்)

'இறந்தவர் மூலமாக எனது நகைகள் சிலவற்றை அடைவு வைத்திருந்தேன். அந்த அடைவை மீள்வதற்காக இறந்தவரிடம் 4000 ரூபா பணத்தை நான் கொடுத்தேன். அவர் இறந்த நேரத்தில் அப்பணம் அவரிடமே இருந்தது.'

இவ்வாறு அச்சுவேலியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமாண கந்தையா நவரத்தினம் என்பவரின் மரணவிசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று எடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த அச்சுவேலியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை வரதராஜா என்பவர் கூறினுர். அவர் மேலும் கூறியதாவது:

### எனது உறவினர்

இறந்தவர் எனதுஉறவினர். அவருக்கும் எனக்கும் இடையில் பணம்கொடுக்கல் வாங்கல் இருந்துவந்தது. அவர் மூலமாக அடைவுவைக்கப்பட்ட எனது நகைகளை மீள்வதற்காக அவரும் நானும் 20—2—82 மாலை 4 மணிபோல் தெல்லிப்பளைக்குச்சென்றோம். அன்று அடைவு மீளமுடிய

(8ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நல்லதோர் வீணை செய்து
அதை நலன் கெடப் புழுதியில்
எறியக்கூடாது. இது வீணாக
வாழும் வீணைவாழ்வு.

— பாரதியார்.

# நமது நோக்கு

## உலக இந்துமகாநாடு

உலக ஆதிக்கத்துக்கு வல்லரசுகள் போட்டி போட்டுவரும் இக்காலத்தில், கடந்தகாலத்தில் நடைபெற்றுவந்த மதச் சண்டைகள் பெருமளவிற்கு மறைந்துவிட்டது பெருங்காரியம்.

மதச்சண்டைகள் மறைந்துபோவதற்கு மத நம்பிக்கை அருகிவருவதும் ஒரு காரணமாயிருக்கலாம்; அதுமட்டுமல்ல 'எம்மதமும் சம்மதம்' என்ற ஒரு போலிச்சமரசம், இந்துமதத்தின் சகிப்புத்தன்மையைக் குறிக்கும் மகாவாசகமாகக் கூறப்படுவதும் இன்னொரு காரணம். இது யப்பானியர் அணியும் 'கிமோனுவை'ப் போல் (முழுச்சட்டை) பல பாதங்களையும் மூடிமறைக்கும் 'மணிவாசகமா'யமையும். எந்த மதத்திலும் அடிப்படை நம்பிக்கையில்லாதவர்கள் தங்கள் 'லௌகீக'ப் போக்கை ஆதரிக்க வசதியான வாசகமாயிருக்கிறது.

இந்துமதத்தின் உலகளாவிய பெருமையை அகிலஉலகுக்கும் எடுத்துக்காட்டிய மகான்களின் கருத்துவேறு; எம்மதமும் சம்மதமென்ற கருத்து வேறு.

இந்து மதத்தின் பல்வகைப்பட்ட கோட்பாடுகள், ஒருமரத்தின் பல கிளைகள் போலமைவதையும், மற்றும் உண்மைச் சமயங்கள் எல்லாம் ஒரே பரம்பொருளை அடையும் வழிகளென்றும் அனைத்துலகிலும் முழங்கிவந்தவர் சுவாமி விவேகானந்தர்.

''வேறுபடு சமயமெல்லாம் புகுந்துபார்க்கின், விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடும் கருத்தில்லை! முடிவில் மோனவாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா'' என்ற தாயுமானவரின் தெளிந்த சித்தாந்தம் மதப்பூசல்களை ஒழிக்கவல்ல ஆன்மீக அணுக்குண்டெனலாம்.

இந்த அற்புதப்பின்திரையில் சமயத்தின் பெயரால், மலிந்துகிடந்த பல ஊழல்களைக் களைந்து சுத்த சன்மார்க்க நெறியான சைவ சித்தாந்தத்தை நிலை நாட்டிய வீரன் ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த நாட்டில் அகிலஉலக இந்து மகாநாடு வருகிற மாதம் நடைபெறுவது வரலாற்றுப்பெருமைவாய்ந்த நிகழ்ச்சியாகும்.

இந்த மகாநாட்டை யார் நடத்துகிறார்கள்? எங்கு நடத்துகிறார்கள்? ஏன் நடத்துகிறார்கள்? — இவ்வித கேள்விகள் எழுப்பப்படுவதும் அவற்றிற்கு விடை காண்பதும் இயல்பு. அவ்விடைகளின் வேறுபாட்டில் திண்டாடுவது ஒரு இருட்டறையில் அங்கு இல்லாதஒருகறுத்தப்பூனையைத் தேடி அலையும் முயற்சியை நினைவுறுத்துகிறது.

எந்த மகாநாட்டிலும் இவ்வித வேறுபாடுகள் உற்பத்தியாவது சகஜம். அதுவும் தமிழ் மாநாடோ அல்லது இந்து மாநாடோ வென்றால் தெய்வங்களே! இவற்றிற்கு எவ்வித பஞ்சமும் இல்லை. இவர்றல் ஒரு பொல்லாப்புமில்லை. பரம்பொருளின் வழக்கமான லீலைகளில் இதுவும் ஒன்று!

நாம் மேலே குறிப்பிட்ட விடயங்கள் முக்கியமான வையல்லவென்று சொல்ல முடியாது. உதாரணமாக இந்த மாநாட்டை பாடல் பெற்ற ஸ்தலங்கள் ஒன்றில் அல்லது ஒப்பில்லாத சைவ சமய சமூகம் அடர்ந்திருக்கும் ஒரு நகரத்தில் வைத்திருக்கலாம் என்ற கருத்து அடிபட்டிருந்தது. இவ்வித கருத்துக்களும் கோரிக்கைகளும் செவ்வனே ஆராய்ந்து ஒருமுகப்படுத்தப்படவேண்டிய விடயங்கள் என்பதை நாம் வற்புறுத்துகின்றோம்.

ஆயினும் கருத்துவேறுபாட்டால் காரியம் மந்த நிலையடைவதை இந்துக்கள் மட்டுமல்ல எந்தச் சமூகத்தினரும் விரும்பமாட்டார். அதனைவிட இம்மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் பிரதிநிதிகள் அமெரிக்கா தொடக்கம் யப்பான் வரைக்கும் பரந்துபட்டிருக்கும் பல நாடுகளிலிருந்து வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு உட்பட பாரத நாட்டின் பிரதிநிதிகள் — சமயத்தலைவர்கள் அறிஞர்கள் ஆதீனகர்த்தர்கள் மாநாட்டின் முக்கிய காட்சியாக அமைவர். இவர்கள் எல்லோரும் இலங்கையில் தமிழ் வளர்வதை ஏற்கனவே நன்கறிந்திருப்பார்கள்.

தமிழ்வேறு; சைவம் (இந்துசமயம்) வேறு என்பதை நிராகரிக்கும் வைதிக கூட்டத்தினர் சைவத்தின் இந்துமதத்தின் உச்சி இலங்கையில் என்ன சுகம் பேசுகிறதென்பதை அனுபவிக்க வரும் அறிவாளர்களும் அருளாளர்களுமாவர்.

இவற்றைக் கருத்திற்கொண்டு இம்மாபெரும் கைங்கரியத்துக்கு உதவ சைவ நன்மக்கள், இந்து மதத்தினர் தமிழ்மக்கள், சமய அபிமானிகள் அனைவரும் முன்வரவேண்டும்.

## எதிர்த்தவர்கள் கைது

கௌதமாலா, மார்ச் 10.

கௌதமாலாவில் வெற்றி பெற்ற இராணி அதிபர் ஜெனரல் எரிபல்குசேராவைஎதிர்த்து போட்டியிட்ட 3 அபேட்சகர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

அதிபர் வெற்றிபெற்றதை ஆட்சேபித்து ஊர்வலம்நடத்த முற்பட்டபோதே அவர்கள் கைதானார்கள்.

ஆர்ப்பாட்ட கூட்டம் தடைசெய்யப்பட்டிருந்தது கூட்டம் நடைபெறவிருந்த பிரதான சதுக்கத்திற்கருகில் துப்பாக்கி சூடு இடம்பெற்றுள்ளது. ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியபோது, கண்ணீர் புகை அடிக்கப்பட்டு கலைக்கப்பட்டனர். தேர்தலில் மோசடி நடைபெற்றதாக தெரிவித்து இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். [க]

# சோவியத் யூனியனில் தேசமளாவிய அளவில் பாரதி நூற்றுண்டுவிழா.

## தமிழ்நாடுவந்த சோவியத் அறிஞர் தகவல்

சென்னை, மார்ச். 10

பாரதி நூற்றுண்டு விழா சோவியத்யூனியனில் தேசமளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது.

இந்நூற்றுண்டு விழாத் திட்டத்தின் அடிப்படையில் ''கீழைநாட்டு அறிஞர்கள், மற்றும் எழுத்தாளர்கள்'' என்ற வரிசையில் ''சுப்பிரமணிய பாரதி'' என்ற தலைப்புக் கொண்ட நூலை கீழைத் தேய்வியல் ஆராய்ச்சிக்கழகம் வெளியிடும்.

இவ்வாறு இங்கு வந்துள்ள சோவியத்யூனியனின் பாரதி நூற்றுண்டு விழாக்கமிஷனின் உறுப்பினரான திரு. பி. கொபிலின் தெரிவித்தார்.

இந்தியக்குடியரசின் 32வது ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்த ஒரு சோவியத் கலாசாரக் குழுவிற்குத் தலைவராக திரு. கொபிலின் சென்னை வந்திருந்தார். சோவியத் யூனியனில் பாரதி நூற்றுண்டுவிழாக்கொண்டாட்டங்களுக்கானஏற்பாடுகள்குறித்து திரு. கொபிலின் விபரித்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நூற்றுண்டு விழா சோவ்யத்யூனியனில் விரிவான அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவில் பாரதியின் பெயர் எவ்வளவு பிரபல்யமானதோ அதேபோல மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியை வாழ்த்தி வரவேற்றமுதலாவதுஇந்தியக் கவிஞர் என்ற முறையில் பாரதி சோவியத்யூனியனிலும் மிகப்பிரபலமானவர் ஆவார்.

சோவியத் மக்களை வியந்து போற்றியவர் என்ற முறையிலும் சோவியத்—இந்தியா நட்புறவை தர்க்கமாக ஆதரித்தவர் என்ற முறையிலும் சோவியத் மக்கள் பாரதியை நன்கு அறிவர். அவருடைய கவிதைகள் ரஷ்ய மொழியில் பலமுறை வெளியாகியுள்ளன. சோவியத்—இந்தியவியலாளர்கள் அவருடைய படைப்புகளை விரிவாக ஆராய்ந்து வருகின்றனர்.

புகழ்பெற்ற சோவியத் எழுத்தாளர் ஸெர்கி பருச்தீன் மற்றும் பேராசிரியர் எவ்கெனி ஸெலிஷேனின் தலைமையில் 37 உறுப்பினர்களைக் கொண்ட பாரதி நூற்றுண்டுவிழா கமிஷன் இயங்கி வருகிறது.

பிரபல சோவியத் தமிழ் அறிஞரான திரு. வித்தாலி பூர்ணிகா, திரு. கொபிலின் ஆகியோர் இக்கமிஷனின் செயலாளர்களாவர்.

நூற்றுண்டுவிழா கமிஷனின் பணிகளை விளக்கிக் கூறிய திரு. கொபிலின் சோவியத் யூனியனின் பிரபலமான செய்தித் தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் பாரதியின் படைப்புகளைப்பற்றிய கட்டுரைகளையும், அவருடைய கவிதைகளையும் பிரசுரிக்கத் தொடங்கியுள்ளதாகக் கூறினார். இக்கமிஷனின் உறுப்பினர்களாக உள்ள பிரபல எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், மற்றும் கலைஞர்கள் பாரதியைப் பல கோணங்களில் சித்தரிக்கும் கட்டுரைகளை எழுதுகிறார்கள். பாரதியைப்பற்றிய விஞ்ஞானக் கருத்தரங்குகள் நடைபெறும். மாஸ்கோவிலுள்ள நட்புறவு மாளிகையில் இவ்வாண்டு டிசம்பர் மாதம் நிறைவு விழா நடைபெறும்.

### பாரதிக்கு மட்டும் ஏன் மதிப்பு?

தமிழ்நாட்டிலிருந்து தமிழ் அறிஞர்கள் யாரேனும் அழைக்கப்படுவார்களா? எனக் கேட்பதற்கு அத்தகைய யோசனைகள் உள்ளன என்றார் திரு.கொபிலின். இந்தியாவின் புகழ் பெற்ற கவிஞர்களுள் பாரதியின் பெயர் மட்டும் சோவியத் யூனியனில் ஏன் பிரபல்யம் அடைந்துள்ளது? என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர் மனித இனத்தின் பால் பாரதி கொண்டிருந்த அன்பும் மனிதனின் விடுதலையில் அவர் கொண்டிருந்த தணியாத ஆவலும் அவருடைய காலனி ஆதிக்க எதிர்ப்பும் சோவியத் மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன என்றார்.

சோவியத் யூனியனில் வெளியிடப்பட்ட பாரதியின் படைப்புகள் பற்றிக் கூறிய திரு. கொபிலின் பல்வேறு காலனிகளில் பாரதி படைத்த 42 படைப்புகள் அடங்கிய நூல் ஒன்று ரஷ்ய மொழியில் 1 63ம் ஆண்டில் வெளியிடப்பட்டதென்றார். அதில் 'தேசிய கீதங்கள்' புகழ் பெற்ற கவிதையான 'புதிய ருஷ்யா', 'வசன கவிதை', 'குயில் பாட்டு' ஆகியவை இடம்பெற்றுள்ளன.

1970 ஆம் ஆண்டுகளில் பாரதியின் பாடல்கள் பல்வேறு ரஷ்ய மொழித் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளது. ஸெர்கி ஸெவெர்த்சேவ் மொழிபெயர்த்து ''நண்பர்

(7ம் பக்கம் பார்க்க)

# தனிச் சிங்களத்தில் நியமனக் கடிதம்

[பண்டத்தரிப்பு]

தாதிகளாக தெரிவு செய்யப்பட்டு யாழ். அரசினர் தாதிகள் பயிற்சிப்பாடசாலைக்கு அனுமதிக்கப் பட்டவர்களுக்கு கொழும்பிலுள்ள சுகாதார திணைக்களம் தனிச்சிங்கள மொழியில் நியமனக்கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது. இவர்களின் சேவை நிபந்தனைகள் போன்ற சகல விபரங்களும் தனிச்சிங்கள மொழியில் மாத்திரம் இருப்பதால் அதை வாசித்து விளங்கிக் கொள்ளமுடியாது திண்டாடுகின்றனர்.

இவ்வருடத்திற்கான தாதிகள் பயிற்சிநெறி யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் எதிர்வரும் 15ம் திகதி திங்கட்கிழமையன்று ஆரம்பமாகின்றது. கொழும்பிலுள்ள சுகாதார திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் இருபது பேருக்கு மேற்படி தாதிகள் பயிற்சி நெறிக்கு அனுமதி கிடைத்துள்ளது. இவர்களுக்கு சுகாதார திணைக்களம் அனுப்பிவைத்துள்ள அனுமதி—நியமனக் கடிதங்களோ தனிச்சிங்களத்தில் உள்ளன. இதனைச் சரியாக வாசித்து தமக்கு விதிக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் பயிற்சிநெறி பற்றிய விபரங்கள் போன்றவற்றை விளங்கிக்கொள்ள முடியாது இருப்பதாக அனுமதி பெற தெரிவு செய்யப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த மாணவி ஒருவர் கவலை தெரிவித்தார்.

# யாழ். மாவட்டத்துக்கென பல குடியேற்றங்களை உருவாக்கினர்

## அமரர் ஸ்ரீகாந்தாவுக்கு அஞ்சலி

(கொழும்பு)

''அந்நாட்களில் சிவில் சேவையில் சித்தியடைவோர் மிகக்குறைவு. அவர்கள்திறமைசாலிகளாகவே இருக்கவேண்டும். அத்திறமை ஸ்ரீகாந்தாவுக்கு நிறைய உண்டு. அதனால்தான் அவர் சிவில்சேவை அதிகாரியாக விளங்கினார்.''

கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்சபையின் ஆதரவில் நடந்த அமரர் ஸ்ரீகாந்தா நினைவாஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த இளைப்பாறிய நீதியரசர் திரு வ. சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: ''எல்லா மாவட்டங்களிலும் டார்க்க அரசாங்க அதிபராக யாழ். மாவட்டத்தில் பதவி வகிப்பது ஒரு அரசர் ஆட்சி செய்வது போலாகும். அக்காலத்தில் அத்தனை மதிப்பு; மரியாதை உண்டு. தங்களின் சொந்த முயற்சியால் எதனையும் செய்யமுடிந்தது. யாழ் மாவட்டத்திற்கென பல குடியேற்றத்திட்டங்களை உருவாக்கினார். அவற்றை செயற்படுத்தினார் அத்தோடு சமயவளர்ச்சிக்காகவும். பெரும் பணிபுரிந்தார். நாவலர் சபையின் ஆரம்பகாலம் முதல் பொதுக் காரியதரிசியாகவிருந்து நாவலர் சிலையை நல்லூரில்நிறுவ அல்லும் பகலும் அயராது உழைத்த பெருந்தகையாவர் அவரின் இழப்பு நமக்குமட்டுமல்ல முழு நாட்டிற்குமே பேரிழப்பாகும்.''

ஓய்வுபெற்ற நீதியரசர் கலாநிதி ஏச். டபிள்யூ. தம்பையா பேசுகையில் கூறியதாவது:-

''அமரர் ஸ்ரீகாந்தா என்னுடன் யாழ். மத்திய கல்லூரியில் ஒன்றாகவே கல்விகற்றார். சிறுவயதிலேயே சமயப்பற்றுள்ளவராக திகழ்ந்தார். கல்வியில் மிக திறமைசாலியாக விளங்கினார். இதனால் கல்லூரி பரிசளிப்பு விழாக்களில்நிறைய பரிசுகளைப் பெற்றார். இவர் தற்புகழ்ச்சிக்காக எதுவும் செய்தவரல்ல புகழைவிரும்பாத பெருமனுஷன் அவரின் கடந்தகால நினைவுகள் என் நெஞ்சில் தோன்றுகின்றன. அப்பெருமனிதனை என்றென்றும் நினைவில் நிறுத்துவோமாக.''

முன்னாள் செனட்டர் திரு. நீதிராசா பேசுகையில், அமரர் ஸ்ரீகாந்தா, தமது வழிகாட்டியாகவும், குருவாகவும் விளங்கிய உத்தமர் என்று கூறினார்.

சிவநெறி மன்றத் தலைவர் திரு ஆ. குணநாயகம், சுவாமி பிரேமானந்தஜி, திரு. இளையதம்பி, திரு. சிவராசா ஆகியோரும் பேசினார்கள். [க]

# பொலிஸ் விசாரணையில்

# காலமான காளிமுத்து

## கொலை செய்யப்பட்டதாக பஞ்சாயத்தார் தீர்ப்பு

சென்னை, மார்ச் 10

தென்காசியை சேர்ந்த ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்த காளிமுத்து என்பவர் பொலிஸ் விசாரணையின்போது மரணமானுர்.

இச்சம்பவம் தொடர்பாக, விசாரணை நடத்தவேண்டுமென்றும் கணவர் தாக்கப்பட்டிருப்பதாகவும் இது ஒரு கொலை என சந்தேகிக்கப்படுவதாகவும் திருமதி காளிமுத்து பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இறந்தவரின் சகோதரரான சுப்பிரமணியம் செய்த புகாரைத்தொடர்ந்தே காளிமுத்து பொலிசாரினுல் கைதுசெய்யப்பட்டார்.

காளிமுத்து கைதுசெய்யப்பட்டு 15 நாள் றிமாண்டில் வைக்கப்பட்டதாகவும் உடல் நிலை சரியாக இல்லாததினுல், பொலிசாரினுல் தென்காசியில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும்போது வழியில் அவர் மரணமானுரென அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், மரணவிசாரணை அறிக்கையின்படியும், மனைவியின் வாக்குமூலத்தின் படியும் இது ஒரு கொலைஎன்று பஞ்சாயத்தார் கூடி தீர்மானித்துள்ளனர்.

உடல் உள்உறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அதன் அறிக்கை வெளிவந்தபின் இதுவிஷயமாக இறுதிமுடிவு அறிவிக்கப்படும் என அமைச்சர் நெடுஞ்செழியன், தமிழ்நாடு சட்டசபையில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் கூறினுர்.

அமைச்சர் நெடுஞ்செழியன் அளித்த பதிலைத்தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் கொண்டுவந்த ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றுக்கு சபாநாயகர் அனுமதி மறுத்தார். (க)

# நீதிபதி - வழக்கறிஞர்கள் இணைந்து செயல்படவேண்டும்

சென்னை, மார்ச். 10

நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் இணைந்து செயல்பட்டால் தான் விரைவில் நீதியை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று பாரத தலைமை நீதிபதி திரு. வை. வி. சந்திரசெட் தெரிவித்தார்.

சென்னை வழக்கறிஞர் சங்கமும், சென்னை அட்வகேட் சங்கமும், இணைந்து நடத்திய கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதிபதிகளின் அவசரமுடிவு காரணமாக மக்களின் நம்பிக்கை குறையக் கூடுமென தெரிவித்த அவர் நீதித்துறை திறமையாக செயல்படாவிட்டால் தான், ஜனநாயகமும் செயல்பட முடியாதென்றும் கூறினுர்.

இக்கூட்டத்தில், சென்னை உயர்நீதிபதி திரு. கோகுல கிருஷ்ணனும் கலந்து கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், பாரத தலைமை நீதிபதி திரு. சந்திரசெட்டுக்கு விருந்தொன்று அளித்தார். இந்த விருந்தில் அமைச்சர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள்கலந்து கொண்டனர். (க)

# பாகிஸ்தானுக்கு பெருமளவு அமெரிக்க யுத்த ஆயுதங்கள்

## பாரதம் கவலை

புதுடில்லி, மார்ச் 10

பெருமளவு யுத்தஆயுதங்களையும் விமானங்களையும், அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கிவருவதையிட்டு, பாரத ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் கவலைவெளியிட்டுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு பெருமளவு ஆயுதங்களை வழங்கிவருவது பாரதத்தை ஆக்கிரமிப்புக்கு வழிகோலும் என்று அமைதிக்கான ஸ்தாபனமொன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்களை வழங்கிவருவது, பாரதத்திற்கு இருந்துவந்த அச்சத்தையும், ஐயுறவையும் அதிகரிக்கச்செய்துள்ளதாகவும் அமைதி ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்துசமுத்திரத்தின், இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதால், மண்டலசார் பற்ற நாடுகள் ஆட்சிபுரிவதற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

போர்நிறுத்த உடன்பாட்டிற்கு, பாரதநிதி இஸ்லாமாபாத்திற்கு செல்வதை ரத்து செய்தது சரியானதென வெளிநாட்டு செய்தி பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

### சிங்கப்பூரில்

# நாணயத்தாள் நீக்கப்படுகிறது

சிங்கப்பூர், மார்ச் 10

சிங்கப்பூரில் பணத்தாளுக்குப் பதிலாக நாணயகுற்றியை புழக்கத்திற்குவிட அரசு தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நிறைவேறிய புதிய நாணயதிருத்தச் சட்டத்தின் கீழ் மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பணத்தாள் அச்சிட பெரும் செலவு ஏற்படுகின்றதென்றும், நாணயக்குற்றிகள் நீண்டகாலம், பாவனைக்கு வைத்திருக்கலாம் என்பதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (க)

# பாக். கிரிக்கெட் குழு புதிய தலைவர் நியமனம்

கராச்சி மார்ச் 10

பாகிஸ்தான் கிரிக்கட் குழுவிற்கு புதிய தலைவராக ஜனுப் மசூர் அகபட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கட் குழுத்தலைவர் திரு. திஸா பட்டோஸ் ராஜினுமா செய்ததை தொடர்ந்து புதிய தலைவர் நியமிக்கப்பட்டார்.

கிரிக்கட் குழுத்தலைவரை விலத்தவேண்டுமென்று கோரி குழுவிலிருந்து வெளியேறிய 8 கிரிக்கட் ஆட்டக்காரர்களும் மீண்டும் குழுவில் இடம்பெறுவார்களென்றும் வெள்ளிக்கிழமை இலங்கை கோஷ்டிக்கிடையிலான ஒருநாள் ஆட்டத்தில் பங்குபற்றுவார்கள் என்றும் கருதப்படுகின்றது.

திறமை அடிப்படையிலேயே ஆட்டக்காரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என புதிய தலைவர் தெரிவின் பின்னர் அறிவிக்கப்பட்டது. (க)

# ஈரான் - ஈராக் சமரச முயற்சிக்கு முட்டுக்கட்டை

தெஹ்ரான் மார்ச் 10

ஈரான் ஈராக்போர் சமரச முயற்சிக்கு இருநாடுகளும் முட்டுக்கட்டையாக இருப்பதாக முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகளை கொண்ட சமாதானக்குழு தெரிவித்துள்ளது.

இருநாடுகளும் சமாதான முயர்சிக்கு விட்டுக்கொடுக்க முன்வந்தால்தான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம் எனக்குழு தெரிவித்துள்ளது.

ஈராக் துருப்புகள் முதலில் வெளியேற வேண்டுமென ஈரானும் யுத்தமுடிவுக்கு வந்தபின்தான் வெளியேறலாம் என்று ஈராக்கும் தெரிவித்துவருவதால் சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (க)

# •30 லட்சம் பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு வேலையில்லையாம்!

லண்டன் மார்ச் 10

வேலையற்றிருக்கும் சுமார் 30 லட்சம் பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு சுயவேலை சமூக சேவைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

பிரிட்டிஷ் நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள புதிய வரவு செலவு திட்டத்தில் மேற்கண்ட ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வரிகுறைப்பு, கைத்தொழிலுக்கான புதிய உதவி வரவு செலவு திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

மோசமான பொருளாதார மந்த நிலையிலிருந்து பிரிட்டனை காப்பாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

1980ம் ஆண்டு மே மாதம் 21.9 வீதமாக இருந்த பணவீக்கம் 12 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் வருடகாலத்தில் இது 10 சதவீதமாக குறையுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

புகையிலை, மதுபானம் பெற்ரேல் தீர்வு அதிகரிக்கப்பட்டுள்ளது. வருமானவரி கூட்டப்பட்டுள்ளபோதிலும் கைத்தொழிலுக்கான உதவி அளிக்கப்பட்டுள்ளது. (க)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி அபிவிருத்தி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம், கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 14ம் திகதி காலை நடைபெறும். அதிபர் பீ. நாகரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கல்வி அதிபதி திரு. எஸ். தனஞ்செயன் சிறப்புரைவழங்குவார். (க)

## குடிநீர்த் தட்டுப்பாடு

(மண்டைதீவு)

கடும்வரட்சி காரணமாக மண்டைதீவுப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கரையோரப் பகுதியில் வாழும் குடியானவர்கள் குடிநீரின்றி மிகவும் கஷ்டப்படுகின்ருர்கள். இப்பகுதியிலுள்ள ஒருசில நன்னீர் கிணறுகளும் வரட்சி காரணமாக வற்றிக்கொண்டு செல்கிறது கால்நடைகளும் கடும் வெப்பத்தை தாங்காது நோய்களுக்குள்ளாகின்றது.

# தீவிரவாத இடதுசாரிகளை வெளியேற்ற வேண்டும்!

### - சீனப்பிரதமர்

பீக்கிங் மார்ச் 9

"சீனுவின் அரசாங்கத்துறையில் அதிகாரக் கெடுபிடிகளில் ஈடுபடும் தீவிரவாத இடதுசாரிகளை வெளியேற்றவேண்டும். தீவிரவாதிகள் அரசாங்கத்தில் இடம்பெறுவதையும் தடைசெய்யவேண்டும்".

மேற்கண்டவாறு சீனப்பிரதமர் உத்தியோக பூர்வமாக அறிவித்ததாக தெரிவிக்கப்பட்டது. (வெ)

# காஷ்மீரில் பாகிஸ்தான் விமான நிலையம்

புதுடில்லி, மார்ச். 10

"பாகிஸ்தான் தனது ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து மட்டுமின்றி பிரான்ஸ், சீனு, பிரிட்டன் ஆகியநாடுகளிடமிருந்தும் வாங்கியுள்ளது. காஷ்மீரில் விமான நிலையம் ஒன்றை அமைக்கவும் பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது".

மேற்கண்டவாறு இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெட்கட்ராமன் பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார். (வெ)

### பாடசாலை மைதானங்களில்

# அரசியல் கூட்டங்கள் நடத்தத் தடை!

(கொழும்பு)

அரசியல் கூட்டங்கள் பாடசாலை மைதானங்களில் நடத்தப்படுவதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது

ஜனுதிபதியின் சிபார்சையடுத்தே இத் தடையுத்தரவு விதிக்கபபட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தடை உத்தரவை அமுல்படுத்தும்படி சகல பொலிஸ் நிலையங்களும் பணிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட ஒரு ஆரசியல் கட்சி பாடசாலை மைதானங்களில் தனது கட்சிக் கூட்டங்களை நடத்திவந்ததாகவும் வெள்ளை அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் கூட்டங்களை நடத்தவும் இக்கட்சி பாடசாலை மைதானங்களையே பாவித்ததென்றும் அறிவிக்கப்பட்டது [கி]

## பலஸ்தீன விடுதலை இயக்கம்

ஜெட்டா, மார்ச். 9

சவூதி அரேபியா 2 கோடி 85 லட்சம் டாலரை பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குவழங்கியுள்ளது. (வெ)

## மிகிந்தலை புதிய நகர்

(கொழும்பு)

மிகிந்தலை புதிய நகர் அபிவிருத்தித்திட்டம் விரைவில் பூர்த்தி செய்யப்படவிருக்கிறது. 3,000 பௌத்த பிக்குகள் திரிபிடகம் ஓதும் நிகழ்ச்சிக்கு பின்னர் இது பூர்த்தியாகும்.

77 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் 80 சதவீத வேலை பூர்த்தியாகியுள்ளது எனமிகிந்தலை எம். பி. திரு. டயஸ் வலகம்பாகு தெரிவித்தார். மின்சார வேலைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் யாத்திரிகர்கள் தங்குமிட வேலைகள் நடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க)

மர்மமான முறையில்

# ஆயுதப்பெட்டகம் திறக்கப்பட்டிருந்ததாம்!

(கல்முனை)

கல்முனை பொலிஸ் நிலைய ஆயுதப்பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரது கைத்துப்பாக்கி ஒன்று மர்மமான முறையில் அப்பெட்டகத்திலிருந்தும் எடுக்கப்பட்டு வெறுருமேசை லாச்சியில் வைக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக பூரண விசாரணையை நடத்துமாறு பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி கைத்துப்பாக்கிக்கு உரியவரான உதவிப் பொலிஸ் இஸ்பெக்டர் கடந்த ஞாயிறு காலை அதனை வெளியே எடுப்பதற்காக ஆயுதப்பாதுகாப்பு பெட்டகத்தை திறந்தபோது அது அங்கு காணப்படவில்லை. இதனையடுத்து தேடுதலை மேற்கொண்ட போது மேற்படி கைத்துப்பாக்கி வெறுரு மேசைலாச்சியில் கிடக்க காணப்பட்டது.

கைத்துட்பாக்கி வெளியே எடுக்கப்பட்டது சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொண்ட பொலிசார் ஆயுதப் பெட்டகம் மர்மமான முறையில் திறக்கட்பட்டிருப்பதைக்கண்டு பிடித்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் பாதுகாப்புக்குபயமுறுத்தலாக விருப்பதுடன் குற்றவாளிகள் பயங்கர ஆயுதங்களை கையாடவும் வழிவகுக்கின்றதென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது, (கி)

“கூட்டணி ஆரம்பித்த நாள் முதல்

# தமிழருக்கு ‘தமிழ்ஈழம்’ வேண்டுமென கூறிவருபவரில் நானும் ஒருவன்”

- கிளிநொச்சி எம். பி.

[பச்சிலைப்பள்ளி]

“தமிழர் விடுதலைக்கூட்டணி ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழர்களுக்குத் தமிழ் ஈழம் வேண்டுமென்றுகூறி வந்தவர்களில் நானும் ஒருவன், தமிழர் கூட்டணியினுல் நடாத்தப்பட்ட எல்லாக் கூட்டங்களிலும் மற்றைய தொகுதிகளை விட எனதுதொகுதியிலிருந்தே கூடுதலான ஆதரவாளர்கள் கலந்துகொண்டு வந்திருக்கிறுர்கள்”

இவ்வாறு கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி கூறினுர்.

அண்மையில்பளைப் பகுதியின் அபிவிருத்தி கருதி பளை அபிவிருத்தி சபை ஒன்றினை அங்குரார்ப்பணம்செய்து வைத்து உரையாற்றுகையிலேயே திரு. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கூறினுர். திரு. இ. நாகேந்திரம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

“கடந்த வருடம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் கிளிநொச்சியிலிருந்து, திரு. இ. கிருஷ்ணராசா விண்ணப்பித்தார். அவருக்கு இடம் அளிக்கப்படாததினுல், ஆலோசனைக்கூட்டம் நடைபெற்ற கூட்டணித் தலைவர் திரு, சிவசிதம்பரத்தின் அலுவலகத்திலிருந்து நாம் வெளியேறினேம்”.

பின்பு முதலாம், மூன்ரும், ஒன்பதாம் இடங்களைவிட்டு ஏனைய இடங்களை, தேர்தலில் விழும்வாக்குவிகிதாசாரத்தின் அடிப்படையில் தருவதாகச் சொன்னுர்கள் அதற்குநாமும் சம்மதித்துத் தேர்தல் அலுவல்களைக் கவனித்தோம் அதன்படி எமக்கு ஐந்தாவது இடம் கிடைத்திருக்க வேண்டும். ஆனுல் அவ்விடம் எமக்கு வழங்கப்படவில்லை.

“இவ்விடயம் தொடர்பாக பரந்தனில் ஒருவர் உண்ணுவிரதம் இருந்தார். அங்கு ஒரு கூட்டணித்தலைவர் கூடவரவில்லை. இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் நான் கூட்டணியில் தான் இருந்து வருகிறேன்.”

“நான் வெளிநாட்டுக்குப் போய் வருகிறேன். ஆனுல் கட்சியைவிட்டுப் போவது என்பதில் எதுவித உண்மையுமில்லை. இதற்கு இடமூம் இல்லை”

“நான் கடந்த 11 வருடங்களாக எம்.பி.யாக இருந்துவருகிறேன். இதில் 8 வருடங்கள் கூட்டணி உறுப்பினராக இருந்து வருகிறேன். 72 ம்ஆண்டு திருமலையில் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில்இருந்து எமக்கு “தமிழ் ஈழம்” வேண்டுமென்று தமிழ் பிரதேசத் தொகுதிகள் தொறும் கூறி வந்திருக்கிறேன். அத்துடன் தலைவர்கள் தமிழ் பிரதேசத்தில் தொகுதிகளில் நடத்தி வந்த கிராமயாத்திரைகளில் நான் தவருது பங்குகொண்டு வந்திருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சட்டமறுப்புப்போராட்டம் வட்டுக்கோட்டை ஆவரங்கால் மாநாடு மேதினக் கூட்டங்கள் என்பவற்றில் ஏனைய தொகுதிகளை விட, எனது தொகுதியிலிருந்து கூடுதலான ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருக்கிறுர்கள்.”

இக்கூட்டத்தில் திரு. இ. கிருஸ்ணராசா, திரு. ஏ. பி. ஜோர்ஜ், திரு. சு. தர்மதேவா,ப. அரியரத்தினம் ஆகியோர் உரையாற்றினுர்கள். [க]

காப்புறுதிக்கு

எய்ற்கன் ஸ்பென்ஸ்

நிகரற்ற சேவைக்கு
நெடுங்காலப் புகழ் பெற்ற
நிறுவனம்

106 ஆண்டுகளுக்கும் மேலாக, லண்டன் லொயிட்ஸ்
நிறுவனத்தின் பிரதிநிதிகளாகப் பணியாற்றிய எய்ற்கன் ஸ்பென்ஸ்,
இலங்கையில், காப்புறுதித் துறையின் முன்னேடி.
ஒரு நூற்ருண்டுக்கும் மேற்பட்ட இந்தக் காலத்தில்,
சேவைக்கும் நம்பிக்கைச் சிறப்புக்கும் புகழ் பெற்ற
நிறுவனமாகப் பெயர் பெற்று விட்டோம்.
நேர் நிகரற்ற இந்த அனுபவத்தை, தற்போது,
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்
பிரதான பிரதிநிதிகள் என்ற முறையில்,
மேலும் சிறப்பாகப் பயன்படுத்துகிருேம்.
எனவே, (ஆயுள், தீ விபத்து, ஆள் விபத்து, மோட்டார்,
கடல் அபாயம். திருட்டு போன்றவைக்கான)
உங்கள் காப்புறுதித் தேவைகள் அனைத்துக்கும்
எம்மை நாடுங்கள். எங்கள் பரம்பரைச் சிறப்பின்
பெருமைக்குரிய நம்பிக்கை வாய்ந்த உன்னத சேவையை,
நாம் உங்களுக்கு வழங்குவோம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்...
என்ருலே காப்புறுதி!

எய்ற்கன் ஸ்பென்ஸ்
அண்ட் கம்பனீ லிமிட்டெட்
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி, கொழும்பு 2.
தொலைபேசி: 24604-6. 25400, 23399.

கிளைச் செயலகங்கள்:
கிளேன் இல்லம், 24 கோயில் வீதி, காலி. தொலைபேசி: 09-2083
290, உட் துறைமுக வீதி, திருகோணமலை. தொலைபேசி: திருமலை 453
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: யாழ்ப்பாணம் 7603

## மகாஜனவில் பாரதி விழா

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இம்மாதம் 19ம் திகதி பாரதி விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பாரதி விழாவையொட்டி மகாஜன மாணவர்களுக்கிடையில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பாரதியார் பாடல்கள் பாடும் போட்டி. நாடகப்போட்டி என்பன, நடத்தப்பட்டு வருகின்றன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் தமிழ்மன்றம இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

19ம் திகதி காலை ஆரம்பமாகும் இவ்விழாவில் பாரதியார் நினைவுப் பேச்சுக்களைத் தொடர்ந்து தமிழ்மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் பபரதியாரால் இயற்றப்பட்ட பாடல்களும் இசையமுதமாக நிகழ்த்தப்படவிருக்கின்றது. இவற்றை நடத்துவதன் நோக்கம் மாணவர் மத்தியில் பாரதியார் பற்றிய நற்கருத்துகளை வளர்ப்பதேயாகும் என் தெரிவிக்கப்பட்டது.

## தலைவர்கள் தெரிவு

[மாவிட்டபுரம்]

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 கிராமோதைய சபைத்தலைவர்களது விபரங்கள் ஏற்கனவே வெளிவந்திருந்தது. மொத்தம்16கிராமோதயசபைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மெலும் இருசபைகளது தலைவர்களாக வசாவிளான் திரு. சி. சிவஞானம், அளவெட்டி தெற்கு திரு. எஸ். அப்பாத்துரை தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கால்நடை வளர்ப்பு

## ஊக்குவிப்புத்திட்டம் வங்கி கடனுதவி

[மண்டைதீவு]

கால் நடை வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி மூலம் அப்பகுதிக்கால் நடை வைத்தியர்களின் சிபார்சின் மீது 5,00 ரூபா குறைந்த வட்டி வீதத்தில் கடனுகை வழங்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பத்துப் பேர் வீதம் வசதி குறைநத குடியானவர்களுக்கு இக்கடன் தவணை முறையில் வழங்கப்படும் என்றும் பசு மாடுகள் வாங்கும் போது மிருக வைத்தியரின் சிபார்சு அவசியம் என்றும் தெரிவிக்கப் பட்டது.

கிளிநொச்சித் தொகுதி தவிர்ந்த ஏனைய பகுதியில் பத்துப் பேருக்கு இக்கடன் வழங்கப்படும் என்று கால் நடைப்பகுதி சிரேஷ்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்

தீவுப்பகுதியில் மேற்படி கடன் பெறுவதற்குப்போட்டி போட்டுப்பலர் விண்ணப்பித்துள்ளார்.இதற்கான விண்ணப்பப் படிவங்கள் நேற்றுப் பிற்பகல் தீவுப்பகுதி மிருக வைத்தியர் அலுவலகத்தில் விநியோகிக்கப்பட்ன


புத்தாண்டு தினத்தை முன்னிட்டு குறைந்தசலார் ஸ்ருடியோ டில்கா 202, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம் முன் யாழ்ப்பாணம்

# சேவைக்கு மக்கள் தந்த பரிசு

## ஊரெழு கிராமோதய சபைத் தலைவர்

(வண்ணார் பண்ணை)

''சமூக சேவைக்கு மக்கள் மதிப்பளிக்கின்றனர் என்ற உண்மையை இன்று கிராமங்கள் தோறும் நாம் காணமுடிகின்றது. எனது முப்பது வருட சமூக சேவைக்கு எமது மக்கள் தந்த பரிசாக இப்பதவியை நான் சந்தோசமாக ஏற்கிறேன் எனது சேவையை மேலும் வலுவடையச் செய்வதற்கு மக்கள் தந்த ஒரு



சிறந்த ஆயுதமே இத்தலைவர் பதவியாகும்.

இவ்வாறு ஊரெழு கிராமோதய சபைத்தலைவராக ஏகமனதாகத் தெரியப்பட்ட ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் திரு. ச. கதிரவேலு தமது தெரிவுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் கூறினார்.

கிராமோதய சபையின் செயலாளரும் விஷேட சேவை அலுவலருமான திரு. வை. ஜெகதீஸ்வரன் தலைமையில் ஊரெழு வித்தியாலயத்தில் நடந்த இக்கூட்டத்தில் தலைவர் திரு. ச. கதிரவேலு தொடர்ந்து பேசுகையில் மகாத்மாகாந்தி கண்ட கிராமோதயம், சர்வோதயம் வளர எமது கிராமத்தின் மூலவளங்களைப்பயன் படுத்தவும் இச்சபை மூலம் என்னுலான முழுமுயற்சிகளையும் செய்வேன். ஆக்கபூர்வமான கருமங்களைச் செய்ய சகல உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புகிறேன். ஆட்சி அமைப்பின் அடித்தளமாக விளங்கும் கிராமோதய சபையின் வளர்ச்சிக்கும் ஆக்கப்பணிகளுக்கும் நாம் அனைவரும் மனப்பூர்வமாக பாடுபடுவோம் என்றார்.

கிராம சேவையாளர் திரு. அ. க. த, கிருஷ்ணராசா பேசுகையில் ''தலைவர் பதவிகளுக்குபோட்டிகள் நடைபெறும் இக்கலகட்டத்தில் சமூக சேவையாளர்களாக நீங்கள் போட்டியின்றித் திரு கதிரவேலுவை அழைத்துவந்து தலைவராகத் தெரிந்துவைத்தது அவரது சேவையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இதற்த நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அரசாங்கம் நல்லெண்ணத்துடனும், உறுதியுடனும் அமைத்துள்ள இந்தக் கிராமோதய சபையைப் பயன்படுத்திப் பலன் அடையவேண்டியது எமது கடமையாகும்'' என்றார்.

---

அரச லிகிதர் சேவையில்

# மேலும் 14பேருக்கு மீண்டும் வேலை!

## தொழில் அமைச்சருக்கு பாராட்டு

(யசழ்ப்பாணம்)

வேலை இழந்தவர்களது விண்ணப்பங்களை பரிசீலனை செய்து எங்கள் சேவையில் உள்ள சிலருக்கு வேலை வழங்கியுள்ளதற்கு உள்நாட்டலுவர்கள் அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதுடன் அவரது இந்த முன்மாதிரியை பாராட்டவும் கடமைப்பட்டுள்ளோம் என்று அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ். கிளையின் தலைவர் திரு. வி. எஸ். கனகரத்தினம் தெரிவித்தார்,

இதேபோல் மேலும் வேலை பெருமல் இருக்கும் ஊழியர்களுக்கும் நீதி வழங்க அமைச்சர் முன் வரவேண்டும் என்றும் அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசாங்க லிகிதர் சேவை முதலாம் தரத்தைச் சேர்ந்த பதின்நான்கு பேருக்கு மீண்டும் வேலை வழங்கும் உத்தரவை உள்நாட்டமைச்சர் அவசரமாக அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிய பதினெட்டு (18) முதலாம்தர லிகிதர்களில் பதின்நான்கு பேருக்கு மீண்டும் வேலை வழங்கும் உத்தரவு கிடைத்துள்ளது. மேலும் நால்வருக்கும் விரைவில் பதவி வழங்கப்படலாம் என தொழிற்சங்க வட்டாரங்கள் நம்புகின்றன.

மீண்டும் வேலை வழங்கப்பட்ட முதல்தர லிகிதர்கள் விபரம் பின்வருமாறு:

திருவாளர்கள் எஸ். மகாதேவா, வி. வேலுப்பிள்ளை என். பாலசுப்பிரமணியம், வி. கிருஷ்ணபிள்ளை, எம். இரத்தினசிங்கம், என். நவரத்தினம், பி நடராசா, என். தனபாலசிங்கம், வி. குமாரசிங்கம், வி நவரத்தினம், இ. கிருஷ்ணபிள்ளை, வி. எஸ். கனகரத்தினம், எஸ். இராசரத்தினம், எஸ். இராசரத்தினம்

அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளையின் செயலாளர் திரு. எஸ். ஆறுமுகம் உட்பட இச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பலருக்கும் கடந்த மாதம் சேவை திருப்பி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(வண்-நி)

---

## தலைவரானார்

(சங்கானை)

சங்கானை கிழக்கு கிராமோதய சபை அங்குரார்ப்பணக் கூட்டம்விசேட சேவை அலுவலர் திரு. இ. ஆ. பஞ்சாயுதன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. திரு. வைரமுத்து செந்தில்நாதன் அதிகப்படியான 6 வாக்குகளால் வெற்றிபெற்று தலைவராகத்தெரிவுசெய்யப்பட்டார்.

---




"ஸ்டொப்" இளட்ச் & பிறேக் புளூயிட்
மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்

STOP Hydraulic BRAKE & CLUTCH FLUID

விநியோகஸ்தர்கள்:-
லிமிடெட்
டீமோ இன்டஸ்றீஸ்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு - 14.
தொலைபேசி: 23702-1, 34751

தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்

TAL 1369

450 மி. லீட்டர் ரூபா 24-25 சதம்
225 மி. லீட்டர் ரூபா 13-50 சதம்


---

## யாழ். மாவட்டத்தில்

# கொத்தணி அமைப்பு முறை நடைமுறைக்கு வருகிறது!

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் கிளிநொச்சி, ஊர்காவற்றுறை ஆகிய தொகுதிகளில் கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை பரீட்சார்த்தமான முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலயமும், ஊர்காவற்றுறையில் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மூலாதாரப் பாடசாலைகளாத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுமார் 5000 மாணவருக்கு உட்பட்ட தொகையினரைக் கொண்டதாக அமைக்கப்படும் இக்கொத்தணிப் பாடசாலை அமைப்பில் மூலாதாரப்பாடசாலை அதிபர், வட்டாரக் கல்வி அதிகாரியைப் போல் செயற்படுவார்.

இப்பரீட்சார்த்தத் திட்டம் யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய தொகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

# நீர்த்தேக்கத் திட்டத்துக்கு ரூ. 47 லட்சம் ஆஸி. உதவி

(கொழும்பு)

மொனருகலைத் தொகுதியில் உள்ள நீர்த்தேக்க திட்டத்திற்கு ஆஸ்திரேலியா 47 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும், வாகனங்களையும் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 800 விவசாயிகள் அங்கு குடியேறப்படுவார்கள். நெற்செய்கைக்கென 2 ஏக்கர் நிலமும் வீடு கட்டுவதற்கு முக்கால் ஏக்கர் நிலமும் ஒவ்வொரு விவசாயிக்கும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும்

தற்போது 375 குடும்பங்கள் அங்கு குடியேறியுள்ளன. வரண்டபகுதி விவசாயத்திற்கெனவும் காணி ஒதுக்கப்படும்.

ஆஸ்திரேலிய ஸ்தானிகர் திரு. வில்சன், காணி அமைச்சு செயலாளர் திரு. நந்தா அபயரத்னவிடம் அன்பளிப்பின் ஒரு பகுதியைக் கையளித்துள்ளார். (க)

---

"குற்றச்செயல்களை குறைக்க

# மரண தண்டனை தீர்வாகமாட்டாது"

## - சிறைச்சாலை ஆணையாளர்

(கொழும்பு)

''மரணதண்டனையை வழங்குவதன் மூலம் பெரும் குற்றச் செயல்களைக் குறைக்க முடியாது என்ற அபிப்பிராயத்தையே முன்னேற்றமடைந்த சகல நாடுகளும் கொண்டிருக்கின்றன. எனவே நாமும் இத்தகைய அபிப்பிராயத்தைப் பின்பற்றி நமது நாட்டிலும் மரணதண்டனை வழங்கப்படுவதை தடை செய்யவேண்டும்''.

இவ்வாறு சிறைச்சாலை ஆணையாளர் திரு. ஜே. பி தெல்கொட பத்தல கெதர என்ற இடத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஆணையாளர் திரு. தெல்கொட மேலும் பேசுகையில் 1948ம்ஆண்டிலிருந்து கொலைச் சம்பவங்கள் 97 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. 1948ம் ஆண்டிலிருந்து 25 வருடங்களில் சனத்தொகையும் பெருகியிருக்கின்றது. இதனுல் குற்றச்செயல்களும் 110 வீதத்தால் கூடியுள்ளது. குற்றச் செயல்கள் விரிவடையாது தடுப்பதற்கும் இளம்சந்ததினரைப் பாதுகாப்பதற்கும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது''.

''பெற்றேரும் ஆசிரியர்களும் குற்றச் செயல்களைக் குறைவடையச் செய்வதில் அதிக பங்கு வகிக்கவேண்டும். பெற்றேர் தமது சிறுவர்களை ஆரம்பகாலம்முதல் நல்ல பாதையில் வழிகாட்டிவந்தால் எதிர்காலத்தில் அவர்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் இறங்கமாட்டார்கள். ஆசிரியர்களும் தமது கடமையை உணர்ந்து மாணவர்களை நல்வழிப்படுத்தி குற்றச் செயல்களைக் குறைக்க முன்வரவேண்டும்'' என்றார். [கி]

---

வரட்சி

## ஒரு வாளி தண்ணீர் 50சதமாகவிற்பனை

(ஹட்டன்)

ஹட்டன் பிரதேசத்தில் கடுமையான வரட்சி நிலவுகின்றது. இதனுல் இப்பகுதியில் குடி நீருக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

ஹட்டன் நகரப் பகுதியில் ஒரு வாளி தண்ணீர் 50சதமாக விற்கப்படுகின்றதெனவும், ஹட்டன் டிக்கோயா நகர சபை தண்ணீர் தாங்கி வண்டிகள் மூலம் வீடுகளுக்கு நீரைக் கொடுத்து வருகின்றதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கா)

---

## கோவா மிளகாய் உற்பத்தி

(கொழும்பு)

புத்தளம் தொகுதியிலுள்ள கற்பிட்டி என்ற இடத்தில் கோவா, மிளகாய் உற்பத்தி வெற்றியளித்துள்ளது.

அங்கு உருளைக்கிழங்கு, வெங்காயம் உற்பத்திசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விவசாய இலாகா அளித்த உதவியினுல் சுமார் 3000 ஏக்கர் நிலத்தில் மரக்கறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (க)

---

## வைத்திய நிபுணர் பரராஜசேகரம் ஜெனிவா பயணம்

(கொழும்பு)

இலங்கையின் பிரபவ கண் வைத்திய நிபுணர் டாக்டர் ஆர். பரராஜசேகரம் உலக சுகாதார நிறுவனத்தின் 'கண் பார்வை இழத்தலைத் தடுத்தல் பற்றிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா பயணமானுர்.

டாக்டர் பரராஜசேகரம் இம்மாநாட்டில் ஆசியாவின் பிரதிநிதியாக கலந்து கொள்கிருர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். [மா]

---

## யாழ். கல்வித் திணைக்கள

# பெண் ஊழியர்களுக்கு தங்குமிடவசதிகள்!

[கரவெட்டி]

''யாழ். கல்வித் திணைக்கள பெண் ஊழியர்களுக்கென தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஏனைய கல்வித் திணைக்களங்களுக்கு முன் மாதிரியான நடவடிக்கையாகும்.''

இவ்வாறு, கல்வி அமைச்சின் மேதிகச் செயலாளர் திரு. எம். பீ. சீ, சில்வா யாழ். கல்வித் திணைக்களத்தில் 25,000 ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள திணைக்களப் பெண் ஊழியர்களுக்கான விடுதி அறைத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விடுதி அறையை திருமதி. சில்வா திறந்து வைத்தார். மேலதிகச் செயலாளர் திரு. சில்வா மேலும் பேசுகையில் கூறியதாவது.

நான் எத்தனையோ அமைச்சுக்கள், திணைக்களங்களில் பணியாற்றியவன். ஆனுல் திணைக்களம் ஒன்றில் பெண் ஊழியர்களுக்கென தங்கும் இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதை எனது சேவையில் இங்கேயே காண்கின்றேன்.''

''இத்திணைக்களப் பெண் ஊழியர்களுக்குக் கிடைத்துள்ள இந்த வசதி ஏனைய கல்வித் திணைக்களகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தவுள்ளேன்'' என்ருர்.

இதனைத் தொடர்ந்து யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக ஒழுங்கு முறைபற்றி அவதானித்த மேலதிகச் செயலாளர் நிர்வாக ஒழுங்கு நடவடிக்கைகளையும் வெகுவாகப் பாராட்டினுர்.

ஹரன் யாழ்.நகர்
T phone: 331
தினசரி 4 காட்சிகள்
From 10—3—82
Limited Engagement
Stevenson's
**Treasure Island**
[For School Children
Contact Manager]

4-வது வாரம்
யாழ்.றீகல்
தினசரி10—30, 2—00,
6—30, 9—30 (4 காட்சிகள்)
**தனிமரம்**

மனோகரா (யாழ்ப்பாணம்)
12—3—82 வரை
Daily 10—30, 2—30, 4—45, 7—00, 9—30
**NINE TO FIVE**

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பாகப்பிரிவினை

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45
7—00 & 9—30
10 th 11 th only
**"I Don't Want To Be Born"**
—A Family Entertainment Mo—

ஸ்ரீதர் தினசரி: 10.30, 2.30, 4.30,
7.00, 9.30
Christopher Lee in
**Jaguar Lives**
(Karate Film)
அடுத்த வெளியீடு
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும்
வெள்ளி விழா சித்திரம்.
பிரதாப்
சுரேகா
**தக்காரா**
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
10.30, 2.00, 4.30, 7.00, 9.30
Adventure Beyond Imagination
Walt Disney's Production
**The Island at the Top of the World**
(Techni Color)

பாடசாலைகளுக்கு ரத்தியேக வசதி செய்துகொடுக்கப்படும். தேவை [illegible] மனேஜருடன் தொடர்பு கொள்ளவும்.

விரைவில் எதிர்பாருங்கள்
சிவாஜி—கமல்—ரஜனி—ஸ்ரீபிரியா
நடித்த
நட்சத்திரம்

# இன்றைய பலன்

மாசி மாதம் 27ம் திகதி
வியாழக்கிழமை
(11—3—82)

மேடம்: சிந்தையில் குழப்ப நிலை தோன்றக் கூடும் மனைவியின் உடல்நலம் சிறிது கவலையை தரலாம் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் சிலர் கடன்பட நேரிடலாம் தெய்வநம்பிக்கை நன்று.

இடபம்; மகிழ்ச்சிகரமான தினம் குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் கணவன், மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

மிதுனம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படலாம் சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும் வருவாயும் வளரும்.

கடகம். வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும் செல்வாக்குபடைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விசயமொன்று உங்களுக்கு சாதகமான முடிவைத் தரும்.

சிங்கம்; உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும் பண விவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம் தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

கன்னி; குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புதிர்போடும் வாழ்க்கையில் சோர்வுக்கு இடமுண்டு.

துலாம்: இல்லம் இன்று கட்டிவெல்லம்போல் இனிக்கும் இன் சொல்லின்மூலம் மற்றவர்களை கவருவீர்கள் பொருள்துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

விருச்சிகம்: நினைத்தது நடக்காது நிம்மதி பறக்கும் நெடுப்பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும் அதிக சிந்தனையை தவிர்.

தனு: மாதுருவழி பெருமைக்கு இடமுண்டு மனம் போல யாவும் நடக்கும் இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

மகரம்: பொருள் ஈட்டுவதில் புதியபாதையை விடுத்துக் கொள்வீர்கள் கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும் வீட்டில் சுப கருமங்களுக்கும் இடமுண்டு.

கும்பம், குடும்பத்தில் குறை கேட்க நேரிடும் சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தோன்றும் பொறுமையுடன் நடப்பது நன்று.

மீனம்: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும் களஸ்திர வழியால் பொருள் வரவும் உண்டு, பெரியோர்கள் மதிப்பும் உண்டு.


சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# தவக்கால நற்சிந்தனை

பூலோகத்தில் கிறிஸ்துவும் மனிதரால் நிந்திக்கப்பட்டார், மேலும் கொடூர துன்பங்கள் நடுவில், வாக்கினுல் வர்ணிக்கமுடியாத அவஸ்தைப்படும் நேரத்தில் அறிந்தவர்களாலும், சினேகிதராலும் கைவிடப்பட்டார். கிறீஸ்து பாடுபடவும், நிந்தனைப்படவும் சித்தமானுல் என்று அறிந்திருக்கிற நீ, எப்படி எதைப் பற்றியாவறு முறையிடத் துணிவாய்? உனக்கு யாதோர் விரோதமும் நேரிடாமற் போனுல் உன் பொறுமையால் எப்படி மகிமை பெறுவாய்? விரோதமான யாதொன்றுஞ் சகிக்க உனக்கு மனதில்லாவிட்டால் நீ கிறீஸ்துநாதருடைய சிநேகிதனுய் இருப்பதெப்படி? கிறீஸ்து நாதரோடு இராச்சியபாரம் பண்ண உனக்கு மனதானுல், கிறீஸ்து வேண்டும், கிறீஸ்துவைப் பற்றியும் பொறுமையாயிரு.

(கிறீஸ்துநாதர் அனுசாரம்)

வெஸ்லி ஜனிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
கமலஹாசன்—சோபா
அழியாத கோலங்கள்



இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரக முதலாவது செயலாளருடன், வடஇலங்கை கைத்தொழில் சபை இயக்குநர்கள் இங்கு காணப்படுகின்றனர்.

# நிலைத்துநிற்கும் அவர் நினைவு



புங்குடுதீவின் கல்வி, சமய வரலாற்றில் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்திற்கு என்றுமே தனியிடமுண்டு. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அமரர் க. செல்லத்துரை அதிபர் ஆற்றிய பணிகள் என்றுமே நினைவு கூரத்தக்கன. அன்னுரின் உத்தம மாணவியாகவும், சக ஆசிரியையாகவும் திகழ்ந்த பெருமைக்குரியவர் திருமதி புவனேஸ்வரி துரைசிங்கம் 25 ஆண்டுகால ஆசிரிய சேவையில் பதினெட்டு ஆண்டுகள் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றியதோடு, வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவந்து திருமதி புவனேஸ்வரி துரைசிங்கத்தின் திடீர் மறைவு பேரிழப்பாகும்.

ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியோடுஇணைந்துள்ளது. அவர் வாழ்வு, கலைவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், உபசரணை நிகழ்ச்சிகள் எதுவானுலும் முன்னணியில்நின்றுதொண்டாற்றியவர் திருமதி புவனேஸ்வரிதுரைசிங்கம்.

புங்குடுதீவின் கல்வி, சமய சமூகப்பணிகளில் முன்னின்று தொண்டாற்றிய அவர் அமரத்துவம் அடைந்த நாட்கள் முப்பது கடந்துவிட்டன. அவரை நினைந்து மாணவ உள்ளங்கள், ஆசிரியர்கள், சமய சமூகப்பணியாளர்கள் உள்ளம் கலங்குகின்றன.

புங்குடுதீவு இந்து இளைஞர் சங்கம், புங்குடுதீவு அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் பணிகளில் மிகுந்த அக்கறையோடு ஈடுபாடு கொண்டுழைத்தவர் திருமதிதுரைசிங்கம்மலேசியா, மொறிசியஸ் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை வந்த இந்து மதப்பேராளர்களை புங்குடுதீவுக்கு அழைப்பித்து விருந்தளித்துக்கௌரவித்த பெருமைக்குரியவர்.

புங்குடுதீவு பாணுவிடைச் சிவன்கோவில், தல்லையப்பற்று முருகமூர்த்திகோவில், இத்திடைப்பு நாச்சிமார்கோவில், ஆகிய தேவஸ்தானங்களில் உரிமையோடு கூடிய தொடர்புடன் தொண்டாற்றியவர். இவர்.

ஆசிரிய சமூகத்தில்ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து, சமய சமூகப்பணிகளில் முன்னின்று உழைத்து ஓர் உத்தம குலகுடும்பப்பெண்ணுக வாழ்ந்து அமரத்துவம் அடைந்துவிட்ட அந்த ஒளிவிளக்கின் நாமம் புங்குடுதீவின்வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.

வி. குகராசன்

# நவாலி கிராமோதய சபைத்தலைவர்

(பண்டத்தரிப்பு)

நவாலி மகா வித்தியாலயத்தில் நவாலி கிராமோதய சபையின் அங்குரார்ப்பணக் கூட்டமும் தலைவர் தெரிவும் நடைபெற்றபோது கிராமோதய சபைத்தலைவராக ஓய்வுபெற்ற கிராம விதானையாரான திரு. ஆர். பரராஜசேகரம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

0 0 0

## சங்கானை வடக்கு

(பண்டத்தரிப்பு)

சங்கானை வடக்கு கிராமோதயசபையின் தலைவராக பண்டத்தரிப்பு மூன்னுள் பட்டின சபைத் தலைவர் திரு. இ. செல்வரத்தினம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் விசேட சேவை அலுவலர் திரு. என். ஏ. அல்பிரட் தலைமையில் நடைபெற்ற சங்கானை வடக்கு கிராமோதயசபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மேற்படி தெரிவு நடைபெற்றது.

# இந்தக் கட்டிடங்கள்

(சங்கானை)

யாழ்.அபிவிருத்திச்சபையின் சங்கானை உப அலுவலகத்தின் மேற்பார்வையிலுள்ள 14 கடைக் கட்டிடங்களைக் கொண்ட சங்கானை நவீன சந்தை கடந்த ஒரு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டுள்ள போதிலும் இதுவரை 8கடைக் கட்டிடங்களே பாவனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மிகுதி 6கட்டிடங்களும் கதவுகள், யன்னல்களின்றித் தூசிபிடித்த நிலையில் கிடக்கின்றன. பகலில் இக்கட்டிடங்கள் பிச்சைக்காரர்களின் தங்குமடமாகவும் இரவில் கட்டாக்காலி நாய்களின் வதிவிடமாகவும் இருந்து வருவதைக் கண்ட வரியிறுப்பாளர்கள் மிகவும் ஆத்திரமடைந்துள்ளனர்.

# காய்கறிகள் தாராளம்

[சுழிபுரம்]

கத்தரி, வெண்டி, கீரை, மிளகாய், வெங்காயம் ஆகியவை இப்பகுதியிலுள்ள சந்தைகளில் தாராளமாகவும் மலிவாகவும் விற்பனைசெய்யப்படுகின்றன.

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவத்துடன் ஆங்கில அறிவும் மின்சார உபகரணங்களைப் பற்றிய அறிவுமுள்ள முப்பது வயதுக்குக் குறைந்த ஆண்கள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 16—03—82க்கு முன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 2509, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

[2509]

க. சி. முத்துக்குமாரசாமி,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

## பின் முற்றுக்கும் தீர்வையின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனம் முடியாமல் காலம் சென்ற நாகலிங்கம் ஜெயச்சந்திரனின் சொத்துக்கள் விடயமாக:

தத்துவ நியாயாதிக்கத்தின் இல 1130/TY

செல்லையா கந்தசாமி,
அன்னை இல்லம், நவிண்டில்றோட், பொலிகண்டி.
மனுதார்

எதிராக

1. ஜெயச்சந்திரன் கைம்பெண் ஜெயதேவி.
2. ஜெயச்சந்திரன் மகள் ஜெயந்தா (பராயமற்றவர்)
3. ஜெயச்சந்திரன் ஜெகதீஸ் (பராயமற்றவர்)
4. ஜெயச்சந்திரன் ஜெகசுதன் எல்லோரும் பொலிகண்டி (பராயமற்றவர்)
5. கந்தசாமி கோபாலசுந்தரம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (பராயமற்றவரின் பாதுகாவலர்)

எதிர்மனுதார்கள்

மேலே சொல்லப்பட்ட காலம் சென்றவரின் மரணசாதன ஒப்பேற்றுதல் சம்பந்தமாக மேலே குறிக்கப்பட்ட இலக்க தத்துவ வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டு பின் முற்றுக்கும் தீர்வை பதியப்பட்டுள்ளதென்று இத்தால்சகலருமறிவீராக

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1982—ம் ஆண்டு தை மாதம் 22—ந் திகதி முற்பகல் 9 மணியளவில் மன்றில் சமுகம் கொடுத்து பின் முற்றுக்கும் தீர்வை முழுத்தீர்வையாக ஏன் பதியக்கூடாதென்பதற்கு ஏதேனும் காரணம் இருப்பின அவைகளை காட்டுமாறுவேண்டப்படுகின்றீர்கள்.

1981—ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16—ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

கே. செல்வராசா,
பதிவாளர்.

காரணம் காட்டும் தவணை 5—3—82 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி

கே. செல்வராசா,
பதிவாளர்.

22—1—82

காரணம் காட்டும் தவணை 14—5—82 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி

கே. செல்வராசா,
பதிவாளர்,

5—3—82. (2502)

## வகுப்பு

எயர் கண்டிஷன் — றெப்பிறிஜிரேட்டர் வகுப்புகள் 11—3—82 இல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க: ஓட்டோ கூல் என்ஜினியேர்ஸ், கந்தப்பசேகரம் லேன், (சாந்தி சினிமா முன்பாக) யாழ்ப்பாணம். 2481

## விற்பனைக்கு

மானிப்பாய் சந்தை, இலங்கை வங்கி அருகாமையில் மெயின் வீதியில் 2½ பரப்பில் அமைந்துள்ள கல்வீடு வளவு விற்பனைக்கு. தொடர்பு கொள்க: சிவயோகநாதன், தொலைபேசி ஒழுங்கை, மானிப்பாய் மேற்கு.

(2505)

40 W பவருடைய (Sharp) 9696 ஸ்ரீயோ மொடல் செற் உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; 151. நாவலர்வீதி, (மனோகரா தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம்

( 507)

## ஏகமனதாகத் தெரிவு

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிராமோதய சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் மாதகல் சென் ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது சபைத் தலைவராக திரு. எம், பாலசிங்கம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றியவரும் திரு. பாலசிங்கம் ஒரு சமூக சேவையாளருமாவார்.

## கரி உற்பத்தி அதிகரிக்கும்

(கொழும்பு)

மரக்கூட்டுத்தாபனம், அடுப்பு மரக்கரி உற்பத்தி வேலையை, வெளிநாட்டுஉதவியுடன் அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

தற்பொழுது 300 தொன் கரி உற்பத்தி செய்யப்படுகிறது. புதிய திட்டத்தின் கீழ் மேலும் கரி உற்பத்தி அதிகரிக்கப்படும்.

அடுப்புகளுக்கு மாத்திரமன்றி கைத்தொழிலுக்கும், மரக்கரி தேவைஅதிகரித்துவருகிறது. விறகிலும் பார்க்க கரி மலிவானது என பாவனையாளர்கள் கருதுகின்றனர். (க)

# படிக்கும்போதே மாணவர்கள் முதலுதவிப் பயிற்சிகளை பெற்றிருப்பது நல்லது!

## சென். ஜோன்ஸ் தளபதி கருத்து

(பண்டத்தரிப்பு)

இன்று நாட்டில் விபத்துக்களில் சிக்கி மரணமடைவோரின் தொகை அதிகரித்து வருகின்றது. தகுந்த முறையில் இவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிக்கப்பட்டால் பெரும்பாலான உயிரிழப்புகளை தவிர்க்கக்கூடியதாக இருக்கும். பாடசாலைகளில் கற்கும் காலத்திலேயே மாணவ மாணவிகள் முதலுதவிச் சிகிச்சை முறைகளில் பயிற்சி பெற்றிருப்பின் அவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை'' இவ்வாறு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பிரதம தளபதி (சொமாண்டர்) டாக்டர் ஒஸ்வின் பெர்ணண்டோ யாழ் மாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் வருடாந்த அணிவகுப்பிலும் சான்றிதழ் வழங்கும் வைபவத்திலும் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் ஒஸ்வின் பெர்ணண்டோ தொடர்ந்து உரையாற்றுகையில் யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான கல்லூரிகளில் முதலுதவிச் செய்முறைப் பயிற்சிகள் கடந்த ஆண்டு தொடக்கம் நடைபெற்று வருவதையிட்டு தாம் மிகவும் மகிச்சியடைவதாகவும் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பியின் அயராத முயற்சியினால் படையின் சமூகசேவைப் பணிகள்விஸ்தரிக்கப்பட்டிருப்பதையிட்டு அவருக்கு பாராட்டுத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் உரையாற்றுகையில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல ஆலயங்களில் முதலுதவிச் சிகிச்சை முகாம்களை அமைத்து பொதுமக்களுக்கு சேவையாற்றிவரும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் பொலிசாருக்கு உதவியாக இருந்து வருவதுடன் இலவச வைத்திய சேவைகளையும் வழங்கி சிறந்த தொண்டுகளைச் செய்து வருகின்றனர் என்றார்.

யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தப்பி நன்றியுரை நிகழ்த்துகையில் முதலுதவிச் சிகிச்சை பற்றிய பயிற்சிகளை பெறவேண்டும் என்ற ஆர்வம் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவ மாணவியரிடையே அதிகரித்து வருவதாகவும் கல்வித்திணைக்களமும் இதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கி வருவதாகவும் கூறினார். அணிவகுப்பு போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும் முதலுதவிச் சிகிச்சை செய்முறைப் போட்டியில் யாழ். கன்னியர் மட மகாவித்தியாலயமும் முதலிடம் பெற்றன. சான்றிதழ்களை படைத்தளபதி டாக்டர் ஒஸ்வின் பெர்ணண்டோ வழங்கினார்.

## கிராம முன்னேற்றத்திலும் ஈடுபடவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டுகளில் அதிக நேரம் செலவிடாது, கிராம முன்னேற்றங்களிலும் ஈடுபடவேண்டும்.''

யாழ். கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழக வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. மோ. அமலதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. அமலதாஸ் தொடர்ந்து பேசுகையில்; விளையாட்டு வீரர்களிடையே போட்டியிருந்தாலும் பொறாமையிருக்கக்கூடாது. இதனால் கிராம முன்னேற்றம் சிதைந்து போவதுடன்; மக்களின் ஒற்றுமையும் குலைந்துவிடும். என்றும் தெரிவித்தார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. இ. கந்தவனம் உபதலைவர்கள்: திருவாளர்கள் மோ. அமலதாஸ், அ. வேதநாயகம், ஞா. அருளானந்தம் பொதுச் செயலாளர்: திரு. அ. செல்வராசா, உபசெயலாளர்: திரு. லீ. அருள்தாசன், பொருளாளர்: திரு. அருள் செல்வரத்தினம், விளையாட்டுச் செயலாளர்: திரு. சி சகாயராசா.

ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## கிராமங்களின் உயர்வுக்கு ஆசிரியர்களே நல் காரணகர்த்தாக்கள்

(பண்டத்தரிப்ப)

''ஒரு கிராமத்து மக்களிடையே நல்லொழுக்கம் மிளிரவும், தீயொழுக்கம் பரவவும், காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் அக்கிராமத்தில் படிப்பிக்கும் ஆசிரியர்களே என்றால் மிகையாகாது. எதிர்காலத்தில் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் ஒழுக்கசீலர்களாகவும் வாழ்ந்து மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் விளங்கவேண்டும்.''

மேற்கண்டவாறு வல்வெட்டி அமெரிக்கமிஷன் பாடசாலையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் பாடசாலை அதிபர் திரு. செ. சின்னரத்தினம் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தையே நம்பியிருக்கும் மனப்பான்மை எம்மைவிட்டு அகலவேண்டும். எமது பாடசாலையில் ஆசிரியர் பற்றுக் குறையை நீக்குமுகமாக சேவையாற்ற இங்குள்ள படித்த பெண்கள் முன்வந்திருப்பதை பெரிதும் பாராட்டுகின்றேன். இப் பெண்களின் சேவையால் எமது பாடசாலை மாணவரின் கல்வித் தரம்வெகுவாக அதிகரித்துவருவதை அவதானிக்கக் கூடியதாகஇருக்கின்றது பாடசாலை வளர்ச்சியில் நலன் விரும்பிகளும், பெற்றோர்களும் பூரண ஒத்துழைப்பை அளிப்பதல் விளையாட்டுப்போட்டிகள், கலைவிழாக்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடாத்தக் கூடியதாக இருக்கின்றது.

## தேசமளாவிய...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

களின் குரல்கள்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட நவீன கால இந்தியக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் பாரதியின் ஆறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ''புதிய ருஷ்யா'', ''கண்ணம்மா என் காதலி'', ''காலனுக்கு உரைத்தல்'', குயில் பாட்டு'', ''ஜெய பேரிகை'' ஆகிய கவிதைகளே அவை. ''நண்பர்களின் குரல்கள்'' என்ற இக்கவிதைத் தொகுப்பு நூலில் ஒரு பிரதியை பாரதி நினைவு நூலகத்திற்கு வழங்குவதற்காக திரு. கொபிலின் கொண்டு வந்துள்ளார். பாரதியைப்பற்றி மேலும் பல தகவல்களைச்சேகரிப்பதற்காகவும் பாரதி நூல்களைச் சேகரிப்பதற்காகவும்தான் இந்தியாவுக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## சிவாஜியின் ஆதரவாளர் தாக்கப்பட்ட சம்பவம் சட்டசபையில் எதிரொலி

சென்னை மார்ச் 0

சென்னை விமான நிலையத்தில், நடிகர் திலகமும், எம். பியுமான திரு. சிவாஜி கணேசனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது ஆதரவாளர்கள்பொலிஸாரினால்தாக்கப்பட்டதை ஆட்சேபித்து, சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இச்சம்பவத்தின் போது 21 பொலிஸாரும், மற்றும் 3 பேரும் காயமடைந்தனர்.

விமான நிலையத்தருகே இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர் [illegible] போகனதாலேயே கண்ணீர் புகையும், தடியடியும் பாவிக்க நேரிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (க)

**Revision Classes By Qualified & Experienced Lecturer**

(DISCUSSIONS ON PAST QUESTION PAPERS AND MODEL ANSWERS)

(I) Financial Accounting I —I C.M.A (Foundation A)
(II) Cost Accounting I — May 1982 Exam,

by

D. R. E. C.

2nd Floor, ''Maniam Buildings,'' No 15,
Sirambiady Lane, (near Sridhar Theatre Jaffna,

DATE OF COMMENCEMENT: 13—03—1982

TIME: 3.15 — 5.15 p. m. Saturday,
3.15 — 5.15 p m. Sunday.

FEES: Rs. 50/—per Subject.

For further particulars, contact,

Office Assistant·
D R. E C.

# கலால் உத்தியோகத்தர்கள்

# தலா ரூ. 2,000 பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

சாராய வேட்டையின்போது வயோதிபர் ஒருவர் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட கலால் பரிசோதகர்கள் மூவரும் அடையாளம் காணப்படாததால் அவர்கள் தலா 2000 ரூபா பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

சங்கானை கலால் பகுதியைச் சேர்ந்த கலால் பொறுப்பதிகாரி ஜே. வில்வராஜா, கலால் பரிசோதகர்கள் எஸ். சிவலிங்கம், எஸ். சிவசுப்பிரமணியம், எஸ். சிவஞானம் ஆகியோர் இளவாலை மாரீசன்கூடலில் வீடொன்றுக்கு சாராய வேட்டைக்குச் சென்றதும் அங்கு நடந்த இழுபறியில் வீட்டிலிருந்த வயோதிபரான சூசை தமியான் என்பவர் இவர்களது தாக்குதலுக்குள்ளாகி மரணமானதும் தெரிந்ததே.

இது குறித்துமரணவிசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. அல்போன்ஸ் அத்தனுசியார்; சாட்சியங்களையடுத்தும், பிரேத பரிசோதனை நடத்திய யாழ். சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையையடுத்தும் இது ஓர் கொலையெனத் தீர்ப்பளித்து மரணவிசாரணை அறிக்கையை மல்லாகம் நீதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார்.

இது தொடர்பாகத் தேடப்பட்டு காங்கேசன்துறை பொலிசில் சரண்புகுந்த மேற்படி கலால் உத்தியோகத்தர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது கலால் பொறுப்பதிகாரி 2500 ரூபா பிணையில்விடப்பட்டு ஏனையோர் அடையாள அணி வகுப்புக்காக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மல்லாகம் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் முன்னிலையில் இவர்கள் மூவரும் அடையாள அணி வகுப்புக்குட்படுத்தப்பட்டபோது சாட்சிகளான கைத்தான் யோகராணி, கைத்தான் சூசானம், தமியான் யாக்கோ ஆகியோர் இவர்களை அடையாளம் காண்பதில் ஈடுபட்டு அடையாளம் காட்டவில்லை.

பின்னர் மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது மூவரையும் தலா 2000 ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்து விசாரணையை இம்மாதம் 24—ம் திகதிக்கு ஒத்திவைத்தார். சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் திருமதி மோகாந்தி பீரிஸ் ஆகியோர் ஆஜராகினர்.

உலக இந்து மாநாடு

# கலை நிகழ்ச்சிகளில்

## இந்தியக் கலைஞர்கள்

(கொழும்பு)

உலக இந்துமகாநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக பிரபல இந்தியக் கலைஞர்கள் பலர் இலங்கை வருகிறார்கள்.

பிரபல ஆடற்கலைஞரும் ஆராய்ச்சியாளருமான டாக்டர் (செல்வி) பத்மா சுப்ரமண்யம் தமிழ்நாடு அரச நர்த்தகி செல்வி சுவர்ணமுகி, சீர்காழி எஸ் கோவிந்தராஜன், சூலமங்கலம் சகோதரிகள், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் ஆகியோர்உட்படப் பலர் வருகிறார்கள்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாட்டு தொடக்கநாளன்று பத்மா சுப்பிரமண்யத்தினதும், முடிவு நாளன்று சுவர்ணமுகியினதும் நடனங்கள் ஏற்பாடாகியுள்ளன. ஏனைய கலை நிகழ்ச்சிகள் ராமகிருஷ்ண மிஷன் மண்டபம், கதிரேசன் மண்டபம், சரஸ்வதிமண்டபம்,விவேகானந்தா மண்டபம் ஆகியவற்றில்நடைபெறும்.

மாநாட்டுக்கு வருகைதரும் ஆதீனகர்த்தாக்களின் தரிசனம் பொதுசனங்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஏப்ரல் 22ம் திகதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மைதானத்தில் இத்தரிசனம் இடம்பெறும். (இ-ம)

## பிரெஞ்சு மொழியிலான இந்துசமய நூல்கள்!

(கொழும்பு)

பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட இந்துசமய நூல்களை இலங்கையில் நடைபெறவுள்ள உலக இந்து மகாநாட்டின் போது பாண்டிச்சேரி மாநில அரசு வழங்கவுள்ளது.

உலக இந்து மகாநாடு தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்குப்பொருட்டுச் சென்னையில் செயலகம் ஒன்று நிறுவப்படுமென்று இந்து கலாசார பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ இராசதுரை இங்கு தெரிவித்தார்

இம்மாநாட்டில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்வதாகவும் அமைச்சர் இராசதுரை தெரிவித்தார்.

இந்து மகாநாட்டுக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக அண்மையில் தென்னிந்தியாவிற்கு விஜயஞ்செய்திருந்த இலங்கை அமைச்சர் இராசதுரை காஞ்சிகாமகோடி சங்கராச்சாரிய சுவாமிகளைச் சந்தித்து மகாநாட்டுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டார். (வெ)


### விற்பனைக்கு

ஈ. எல். எப். 150 டீசல்

முற்றிலும் சீரமைக்கப்பட்டது. பிரயாணிகளை ஏற்றிச்செல்ல உகந்தது.

விபரம்:

37, விக்டோறியா வீதி - யாழ்ப்பாணம்

போன்: 7534 (2514)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 6?-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 1?236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 881, 81?6

### ரூபவாஹினியில் இன்று

(யாழ்ப்பாணம்)

திரு. ஏ. கே. கருணாகரனின் கர்னாடக இசை நிகழ்ச்சி இன்று மாலை 7.15க்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பாகின்றது.

### சங்கானை கிழக்கு தலைவர்

[சங்கானை]

சங்கானை கிழக்கு கிராமோதய சபை அங்குரார்ப்பணக் கூட்டம் விசேட சேவை அலுவலர் திரு. இ. ஆ. பஞ்சாயுதன் தலைமையில் சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் 17சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தலைவர் தேர்தலின்போது திரு. வைரமுத்து செந்தில்நாதன் 6 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்று சங்கானை கிழக்கு கிராமோதய சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### சாட்சியங்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் கூறியதன்படியே அவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் சாட்சிகளை நான் ஆஜர் செய்தேன். ஆகவே சாட்சிகள் சோடிக்கப்பட்டன என்பதை நான் மறுக்கிறேன்'' என்றார்.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா சம்பவதினத்தையடுத்து பொலிஸார் வேறு சம்பவங்கள் குறித்த விசாரணைகளிலும் ஈடுபடவேண்டியிருந்தது. பதினொரு இராணுவ வீரர்களின் வாக்குமூலங்களையும் பெறவேண்டியிருந்தது. இரசாயனப் பகுப்பாய்வாளரை வரவழைக்கும் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டியிருந்தது. இதனாலேயே சாட்சிகளது வாக்குமூலங்களைப் பதிவுசெய்யத் தாமதம் ஏற்பட்டது'' என்றார்.

நீதிபதி இவற்றை மரணவிசாரணை அறிக்கையில் பதிவு செய்தார்.

### நீதிபதி கண்டித்தார்

மரணவிசாரணையின் ஒரு கட்டத்தில் சாட்சியான சின்னப்பு சத்தியேஸ்வரனை நீதிபதி கண்டித்தார்.

சாட்சி தமது சாட்சியத்தின் போது தடுமாறியதால் ''கேட்கும் கேள்விகளுக்குப்பதில்சொல்லும். வீணாகஅலட்டவேண்டாம்'' என்று நீதிபதி கண்டித்தார்.

மரணவிசாரணை முடிவில் அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைக்காததால் மரணவிசாரணையை இம்மாதம் 29 ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

### இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழா இன்றைய முக்கிய நிகழ்ச்சிகள்;

மாலை 6 20 மணி செல்வி மாலினி ஸ்ரீநிவாசன்—வீணை; திரு. ஏ. எஸ். இராமநாதன்—மிருதங்கம்.

7-20 மணி தலைமையுரை திரு. எஸ். பரம்தில்லைராசா.

7-30 மணி திரு, எஸ். பத்மலிங்கம்—பாட்டு; திரு. எஸ். வெங்கடேஸ்வரன்— வயலின்; திரு. எம். சிதம்பரநாதன்—மிருதங்கம்.

8-30 மணி: பரதநாட்டியம்-இலங்கை இளங்கலைஞர் மன்ற மியூசிக் அக்கடமி மாணவிகள். (ம)

### பொருளியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உயர்தரமாணவர்களுக்கான பொருளியற் கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இன்று நல்லூர் வட்டாரக் கல்வி அலுவலர் திரு. சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்இக்கருத்தரங்கில்யாழ். பல்கலைக் கழக பொருளியற்றுறைத் தலைவர் திரு. நா.பாலகிருஷ்ணன், யாழ். செயலக திட்டமிடல் அதிகாரி திரு. வி. எஸ். சுவாமிநாதன், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் எம். எம். அந்தோனிமுத்து, வே. ப. சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவர். (மா)

## 'நவரத்தினம் இறந்தபோது..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அச்சுவேலிக்குத் திரும்பிவந்தோம். அடைவு மீள்வதற்காக அவரிடம் 4000 ரூபா பணத்தை நான் கொடுத்திருந்தேன். அவரிடமே அப்பணமிருந்தது. அன்று இரவு 10 மணியளவிலேயே அவரை நான் கடைசியாகப் பார்த்தேன். அப்போது அவர் வெள்ளைச் சாரமும், மஞ்சள் நிறச்சேட்டும் அணிந்திருந்தார். மோதிரம், மணிக்கூடு என்பனவும் அவரது கையில் இருந்தன.

### இரவு 10 மணிவரை இருந்தேன்

'அன்று மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணிவரை காலமானவருடன் அவரது கார் திருத்தும் வேலையாக சிவாறேடேர்ஸ் முதலாளி வீட்டில் நின்றேன். அவரது கார் அங்கேதான் நிறுத்தப்படுவது வழக்கம். இறந்தவரின் வீட்டிற்குச் செல்லும் பாதை சரியில்லாமையால்அங்கு காரைக் கொண்டுபோவதில்லை.

நீதிபதி: நீர் கடைவைத்து வியாபாரம்செய்கிறீர்?—ஆம்.

நீதிபதி: உமது கடையில் இருந்து சிவா றேடேர்ஸ் முதலாளியின் வீடு எவ்வளவு தூரத்தில் உண்டு?—50 யார் தூரத்தில் உண்டு.

### பொலிசார் பதியவில்லை

நீதிபதி: 20ம் திகதி மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இறந்தவர் சிவா றேடேர்ஸ் முதலாளி வீட்டில் தான் நின்றாரென்பதை எப்படி உறுதியாகக் கூறுகிறீர்?—நான் அந்நேரத்தில் அவருடனேயே நின்றேன்.

நீதிபதி: மறுநாள் நீரும் திருக்கேதீஸ்வரம் போக இருந்தீரா?—ஆம்.

நீதிபதி: இறந்தவர் இறந்து கிடந்த இடம் உமது கடையிலிருந்து எவ்வளவு யார் தூரத்திலுள்ளது?—50 யார் தூரத்திலுள்ளது.

நீதிபதி: இறந்தவர் இறந்து கிடந்த சென். திரேசா பாடசாலைக்கு முன்பாக அன்றைய இரவு தெருவிளக்குகள் எரிந்தனவா?—அது பற்றித் தெரியாது.

நீதிபதி: சம்பவத்தின் பின் 24ந் திகதியே வாக்குமூலம் அளித்திருக்கிறீர். ஏன் உடன் வாக்குமூலம் அளிக்கவில்லை?—முன்னரே வாக்குமூலம் அளிக்கச் சென்றேன். பொலிஸார் பதியவில்லை.

நீதிபதி: 20ந் திகதி மாலை கார் திருத்தியிருக்கிறீர்கள். திருத்துவதற்கு முன்னர் தெல்லிப்பழைக்கு அடைவு மீளச் சென்றிருக்கிறீர்கள். திருத்தப்படவேண்டிய காரில் எப்படித் தெல்லிப்பளைக்குப் போனீர்கள்?—கிட்டிய தூரத்திற்கு ஓடக்கூடிய நிலையிலேயே கார் இருந்தது. தூர இடத்திற்குப் போகவேண்டியிருந்ததால் (திருக்கேதீஸ்வரம்) சில்லறை வேலைகள்செய்து 'ஒயில்' மாற்றுவதில் ஈடுபட்டோம்'' என்றார்.

### சத்தியேஸ்வரன் சாட்சியம்

இதனையடுத்து சின்னப்பு சத்யேஸ்வரன் (அச்சுவேலி) என்பவர் சாட்சியமளித்தார்.

அவர் கூறியதாவது 'இறந்த நவரத்தினத்திற்குச் சொந்தமான சி எல் 6931இலக்க காருக்கு நானே சாரதியாக இருந்தேன். 20—2—82 காலை அக்காரை அச்சுவேலியில் நிறுத்திவிட்டு வாடகைக்கு ஓடுவதற்காக அங்கு நின்றேன். மாலை மூன்று மணியளவில் இறந்தவரும் வரதராஜாவும் வந்து என்னிடம் காரை வாங்கிச் சென்றனர். பின்னர் 6 மணியளவில் திரும்பி வந்தனர். பின் நானும் காரில் ஏறி மெக்கானிக் ஒருவரையும் கூட்டிக் கொண்டு இறந்தவர்,வரதராஜா, மெக்கானிக், நான் ஆகிய நால்வருமாக சிவா றேடேர்ஸ் முதலாளி வீட்டுக்குப் போனோம். வரதராஜா தமது நகையை அடைவு மீள்வதற்காக இறந்தவரிடம் 4009 ரூபா பணம் கொடுத்தது எனக்குத் தெரியும். வரதராஜா பணத்தை சரிபார்க்கும்படி என்னிடம்தர, நான் அதனைச் சரிபார்த்து இறந்தவரிடம் கொடுத்தேன். கார் திருத்தவேலைகள் முடிந்து இரவு 10 மணிபோல் நானும், மெக்கானிக்கும், வரதராஜாவும் வீட்டைநோக்கிச் சென்றோம் இறந்தவர் தமது சைக்கிளில் தமதுவீட்டை நோக்கிச் சென்றார் மறுநாள் காலைஅவர் இறந்தது பற்றி அறிந்தேன்'' என்றார்.

உதவி இரசாயன பகுப்பாய்வாளர் திரு. ஆனந்த மெண்டிஸ் என்பவருக்கு அறிக்கையை விரைவில் அனுப்பிவைக்குமாறு அறிவித்தல் அனுப்புமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

இராணுவ சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஏ. சி. டி. சொய்சா, ஜே. வி. எல். சில்வா, கப்டன் திசநாயக்கா, கப்டன் விவேரா ஆகியோர் ஆஜராகினர், இறந்தவர் நலனைக்கவனிக்க சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு, பா. கிருஷ்ணகுமார், உலகநாதன் ஆகியோர் ஆஜராகினர். பொலிஸ் தரப்பில் காங்கேசன்துறைப் பொலிசாருடன் யாழ். உதவி பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா ஆஜரானார்.

மரண விசாரணையைப் பார்க்க ஏராளமானோர் நீதிமன்றத்தில் திரண்டிருந்தனர்.

### பிளவுபட்ட ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல்ல; ஆனால் இப்பிரிவு புதிய உத்வேகத்தை எமக்கு அளித்திருக்கிறது என்றும் தெரித்துள்ளார். (இ—ம)